வளன்ஆயம்
தொழிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# இந்திய விடுதலைப் போரில் மேடைப்பாடல்கள் - வி. எ. தியாகராச செட்டியார்

**சீ. லலிதா**, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02.

**ஆய்வுச்சுருக்கம்**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற பல விடுதலைப் போராட்ட வீரர்களில் தலைசிறந்த ஒருவராகத் திகழ்ந்தவர் வி. எ. தியாகராச செட்டியார். இவர் தொடக்க காலத்தில் விடுதலைப் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவர் நாட்டின்மீது கொண்டுள்ளப் பற்றினை இவருடைய படைப்புகளில் காணமுடிகிறது. இந்திய விடுதலைப் போரில் மேடைப்பாடல்கள் வழியாகத் தமது நாட்டுப்பற்றினை வெளிப்படுத்தும் நிலையைக் காணமுடிந்தது. விடுதலைப் போரில் வீர மரணம் அடைந்தவர்களுக்குப் பாடல்கள் இயற்றுதல், சங்கம் தொடங்குல், அன்னிய துணிகளை மறுத்தல், தூயத்தமிழ் பேசுதல், இயக்கங்கள் மூலம் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வினை ஏற்படுத்துதல் என விடுதலைப் போராட்டத்தில் இவரின் செயல்பாடுகள் காணப்பெற்றன.

**திறவுசொற்கள்**

கேட்பொலி காட்சி, வெகுஜன மக்கள் ஊடகம், மின்னணு மக்கள் ஊடகம் , அரசியல், பொழுதுபோக்கு

**முகவுரை**

எழுச்சிகரமான போராட்டங்களில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் (Mass media) குறிப்பிடத்தக்கப் பங்காற்றுகின்றன. பார்த்தல், கேட்டல் (Audio visual) தன்மைகளை முதன்மையாகக் கொண்டு மின் அணுக்களை அடிப்படையாகக் கொண்ட

தொலைக்காட்சி, வானொலி, கைப்பேசி போன்றவையும், (Electronic mass media) அச்சு வடிவில் வருவனவும் இன்றைய சூழலில் சக்தி வாய்ந்த மக்கள் தொடர்புச் சாதனங்கள், இவ்வகைச் சாதனங்கள் கால வளர்ச்சியோடு மாற்றம் பெறுகின்றன. அவ்வகை மாற்றம் குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டுக் கூறுகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். இந்திய விடுதலைப் போராட்ட காலக்கட்டங்களில், வெளிவந்த மேடை நாடகங்களில் வி. எ. தியாகராச செட்டியாரின் படைப்புகள் பெறுமிடம் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**மேடைப்பாடல் - தகவல் சாதனங்களின் நிலை**

1930 களில் மின் அணுச்சாதனங்களின் வளர்ச்சி குறைந்தும் அச்சுச் சாதனம் வளர்ந்தும் இருந்த நிலையில் திரைப்படம் போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் இந்திய விடுதலைப் போரில் கொண்டிருந்த பங்கு குறித்துத் தியோடர் பாஸ்கரன் என்பவர் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். (The Message Bearers- The Nationalist Politics and Entertaiment Media in South India,1890 -1945), அறந்தை நாராயணன் அவர்களின் தமிழ் சினிமாவின் கதை என்ற நூலும், இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. இவற்றில் மேடைப் பாடல்கள் குறித்த தகவல்களைப் பெற குறைந்த வாய்ப்பே உள்ளது. மேடைப் பாடல்களைப் பாடியோரில் மதுரகவி பாஸ்கரதாஸ் குறிப்பிடத்தக்கவர். இவர் பாடிய பாடல்கள் குறித்த விவரங்களை, பாஸ்கரன் நூலும் பாஸ்கரதாஸ் நினைவு சிறப்பு மலரும் குறிக்கின்றன. நாடகம், திரைப்படம் போன்றவற்றில் பாடப்பட்ட பாடல்களே பெரிதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பாடல்களைப் பாடியவர்கள் குறித்த செய்திகளைக் காணமுடிகிறது. அக்காலத்தில் அவரைப் போல் மேடையில் பாடல்களை இயற்றிப் பாடுவோர் குறித்த விவரங்களை அறிவது கடினமாகவே உள்ளது. இங்கு மேடைப்பாடல்களை இயற்றியோரில் பலர் குறிப்பிடத்தகுந்தோர்.

**மேடைப்பாடல்கள் பாடியோர்கள்**

1. சென்னை முத்தியாலுப் பேட்டை, பாலசந்தச்சரபக் கவி வி. எ. தியாகராகச் செட்டியார்

2. மதுரை கே. குற்றாலம் பிள்ளை

3. கே. வி. மீனாட்சி சுந்நரம் செட்டியார்

4. பி. எஸ். செங்கல்வராயன்

5. எ. வி. மோகனசுந்தரம்

6. பி. சாமிநாத செட்டியார்

7. செல்வன் பத்மன் செல்லப்பன்

8. எஸ். எஸ். விசுவநாததாஸ்

9. மாஸ்டர் சி. பக்கிரிசாமி

10. தாராபுரம் திருமணச்சாமி

11. செந்தமிழ்ச் சந்தச் சரப வி. ஜ. வேலன்

12. சி. எம். புண்ணியகோடி

எனப் பல மேடைநாடகம் இயற்றுவோரைக் கூறலாம். புராண பாடல்கள், பக்திப் பாடல்கள், இந்திய விடுதலைப் பாடல்கள் வரிசையில் மேல் குறிப்பிட்டவர்கள் மேடைப் பாடல்களை இயற்றிப் பாடியவர்களாவர்.

முதன் முதலில் சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் சங்கம் தொடங்கி, சர்வதேச கீதத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்து சாமிநாதன் மற்றும் ப. ஜீவானந்தம் இயற்றிய பாடல்களை மேடையில் முழங்கிய கோவை எம். ஆர். இராமதாசும் குறிப்பிடத்தகுந்தோர் ஆவர்.

மேடைப்பாடல்கள், அடிப்படையில் அழைத்தல் பாணி கொண்டது. நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் கொண்டவை. இப்பாடல்களைக் கேட்போருக்கு தாக்கத்தை எற்படுத்தும் சக்தி கொண்டவை. இவ்வகை வடிவத்தின் ஒருவகை மாற்றமே கவியரங்கக் கவிதைகள் எனலாம். இவ்வகை மேடைப்பாடல்கள் வளர்ந்துவரும் திரைப்படம், நாடகம் ஆகியவற்றோடு இணைந்தாலும் தனக்கெனத் தனித்தன்மை கொண்டுள்ளது. திரைப்படம் என்பது பார்வையாளர்களுக்கு விரைவாகவும் இயல்பாகவும் காணமுடியாத காட்சிகளை விரைவாகவும் தொடர்பானவற்றோடு இணைத்தும் காணமுடிகிறது.

நாடகம் இயல்பான நடைமுறைச் செயற்பாடுகளை அல்லது புராணச் செய்திகளை மக்கள் முன் நடிப்பதன் மூலம் வெளிப்படுத்துகின்றன. ஆனால், குறிப்பிட்ட தனிமனிதனின் குறைந்த பட்சத்தேவைகளோடு, நாடகத்தில் கதையுடன் கூடிய கருத்தை வெளிப்படுத்துவது போல, கதையற்ற ஆனால் கருத்தை மட்டும் வெளிப்படுத்தும் தன்மையை மேடைப் பாடல்களில்தான் காணமுடியும். மேடை நாடகமுறை மக்கள் இயக்க வரலாற்றில் சக்தி மிக்க சாதனங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. இந்திய விடுதலைப் போரில், குறிப்பிடத்தக்க அளவில் மக்களின் செல்வாக்குப் பெற்றிருந்தது. சிறப்பு மிக்க மேடைப்பாடல்களை உருவாக்கியோரில் தியாகராசச் செட்டியார் குறிப்பிடத்தக்கவர்.

**வி. எ. தியாகராச செட்டியார் குறிப்பு**

சூன் 16, 1893 ஆண்டு சிவகங்கையில் பிறந்தவர். கருமுத்து முத்துக்கருப்பன் செட்டியாருக்கு பத்தாவது மகனாகப் பிறந்தார். கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக பணியாற்றியவர். இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தவர். இலங்கையில் கொழும்பு புனித தோமையார் கல்லூரியில் கல்வி பயின்றவர். தூய தமிழில் ‘தமிழ்நாடு’ என்னும் நாளிதழைப் பல ஆண்டுகள் நடத்தியுள்ளார். மதுரை தியாகராசர் கலைக்கல்லூரி, தியாகராசர் பொறியியல் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களை நிறுவியவர். பெரியார் ஈ. வே. ரா வின் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திய போது உறுதுணையாக இருந்தார். நாட்டுப்பற்று, தமிழ்ப்பற்றுக் கொண்டவர். தொழிலதிபராகத் திகழ்ந்தவர். இலங்கையில் மலையகத் தமிழர்களுக்கு உடலில் அடையாளச் சூடு போடும் பழக்கத்தினைத் தடுத்து நிறுத்தியவர்.

1931 ஆம் ஆண்டில் வெளிவந்த வி. எ. தியாகராச செட்டியார் அவர்களின் மேடைகளுக்கென இயற்றிய பாடல் தொகுப்புக்கள் மட்டும் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

**வி. எ. தியாகராச செட்டியார் மேடைப்பாடல்கள்**

1.பண்டித மோதிலால் பாட்டு (1931) (இதனுடன் காங்கிரஸ்) பாட்டுக்களும் அடங்கியுள்ளன. அவை பின்வறருமாறு,

1.சி. ஆர். தாஸ் சிறப்பு

2.பஞ்சாப்பில் நடந்த படுகொலையின் விபரீதம்

3.பாரத நாட்டுச் சிறப்பு

4.சாத்வீகப் போராட்ட சிறப்பு

5.கதருடையச் சிறப்பு

6.கதர் நூல் பாட்டு போன்றவையாகும்.

இப்பாடல்களை கே. பி. சுந்தராம்பாள் கொலம்பியா கிராமபோன் ரெக்கார்டில் பாடியிருப்பதையும் அறிய முடிகிறது. இவர் இயற்றிய வேறு பல பாடல்கள் பதிவு செய்யப்படவில்லை. அச்சு வடிவத்தில் மட்டுமே கிடைக்கின்றன.

2.மகத்துவமிலகும் மகாத்மா காந்தியின் சாத்வீக சமரச வெற்றி (1931).

3.அன்னியராடையை அகற்ற வந்த ஆனந்த கதர் பாட்டு (1931).

4.மஹாத்மா சிறப்பு என்னும் காந்திய பாட்டு (10.09.1931).

5.சுத்த வீர வைராக்யத் தேசீயத் தொணடர் போராட்டம் (1931).

6.சீமைத்துணி, சாராயக்கடை, கள்ளுக்கடை பகிஷ்கார சுதேச மறியல் பாட்டு (1931). (இதனுடன் உப்புச் சத்தியாக்கிரக பாட்டும் அடங்கியது).

7.பண்டித ஜவகர்லால் மீது தேசிய திலகம்.

மேற்குறிப்பிட்ட பாடல் புத்தகங்கள், ஒரு பாரம் (16 பக்கம்) அல்லது அரை பாரம் (8 பக்கம்) அளவில் இன்றைய திரைப்படப் பாடல்களை வெளியிடுவது போல் வெளியிடப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இப்பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டவர் கே. எ. மதுரை முதலியார் என்ற குறிப்பும் சிறிய நூற்களில் வெளியிடப்பட்டுள்ளது. இவை அன்றைய சூழலில் வணிக நோக்கத்தோடு செயல்பட்ட புத்தய வெளியீட்டாளர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டன. திடீர் புளுகன், ஆகாயப்புளுகன் போன்ற பிற நூல்களை வெளியிட்டவர்களே இப்பாடல் நூல்களையும்

வெளியிட்டுள்ளனர். மேலும், அந்த நூல்களைவிட பாடல் நூல்கள் ஒருமடங்கு அதிக விலையுடன் வெளியிடப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. மக்களிடையே இப்பாடல்களுக்கு இருந்த செல்வாக்கை நூலின் விலையின் மூலம் அறிய முடிகிறது. இப்பாடல்கள் இந்திய விடுதலைப் போர் குறித்த அடிப்படையான தகவல்களைக் கொண்டுடிருப்பதைக் காண முடிகிறது.

இந்திய விடுதலைப் போராட்டம் தேசியப் போராட்டமாக வடிவம் பெற்றதை மூன்று கட்டங்களாகக் கூறுவர் அறிஞர் ரஜனி பாமிதத். (இன்றைய இந்தியர் மொழிபெயர்ப்பு நூல், என். சு. பி. எச். 1978) அவை,

"1905 - 1910 முதல்கட்டம்

1919 - 1922 இரண்டாம் கட்டம்

1930 - 1934 மூன்றாம் கட்டம்"[1]

மூன்றாம் கட்ட தேசீயப் போராட்டங்கள் பற்றி எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் தமது நூலில் (காங்கிரஸ் மகாசபையின் பொன்விழா வெளியீடு (1955) பின்வறுமாறு குறிப்பிடுகின்றார். (ப, 246). "பார்த்தார் காந்தி 1930 பிப்ரவரி 14 - ஆம் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டியைக் கூட்டினார். சட்ட மறுப்புப்போர் புரிய வேண்டும் என்று தீர்மானம் ஏற்பட்டது. தலைவர்கள் சிறைபட்டுவிட்டால் மற்றையோர் முன்னின்று போரை நடத்தவும் ஆணை பிறப்பித்தது. காந்திமகான் சர்வாதிகாரி ஆனார், மார்ச் 23 ஆம் தேதி ராஜப் பிரதிநிதிக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். ஆங்கில அன்பரொருவர் அதனைத் தாங்கிச் சென்றார் ராஜப் பிரதிநிதியிடம். 'போர் முரசு கொட்டுகிறேன், சமரஸத்துக்கு வழியிருப்பதாகத் தெரியவில்லை. இருப்பின் பார்ப்போம்' என்பதே கடிதத்தின் சாரம், லார்டு இர்வினது பதிலில் ஒன்றுமில்லை"[2] இக்குறிப்பு ஒரு காங்கிரஸ்காரரால் எழுதப்பட்டது எனினும் மிகையாக இல்லை. இந்த காலத்தில் போராட்ட எழுச்சிகளே இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிற்கு தோல்வியை தழுவியது எனலாம். காந்தி - இர்வின் ஒப்பந்தத் தோல்வி போன்றவை இந்நிகழ்விற்குக் காரணமாக அமைகின்றன.

விடுதலைப்போரில் ஈடுபட்டு உயிர் இழந்தவர்கள் குறித்த உணர்ச்சிமிக்கப் பாடல்களைப் பாடுவது, இயக்கச் செயல்பாடுகளில் இயல்பாக காணப்படுகின்றன,

இக்காலத்தில் உயிர் இழந்த பண்டித மோதியால் (1931 பிப்ரவரி), சி. ஆர். தாஸ் ஆகியோர் குறித்த பாடல்களை வி. எ. தியாகராச செட்டியார் பாடியிருப்பதைக் காணமுடிகிறது.

"உப்புவரி வீட்டுவரி தண்ணீர்வரி வேணுமாம்

உள்ள பொருளுக்கும் தீர்வைபோட்டு வாங்கவேணுமாம்

ஒப்பாமாயிதை கேட்போரை உதை கொடுக்க வேணுமாம்

உத்தியோகஸ்தரல்லாதாரை சிறைக் கனுப்ப வேணுமாம்

இதுதானோ ராஜநீதி சொல்வீர் - யார்க்கும்

பொதுவாக காந்திக்கு ஜெயஞ் சொல்வீர் - பல

புதுமையான சட்டங்களைச் கொல்வீர்"[3]

(பதினெட்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி - 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர், பதிப்பு - 1986)

என்ற பாடலில் அன்றைய சூழலில் உப்புவரி, தண்ணீர்வரி, வேலையில்லாதவர்களுக்குச் சிறை, நிலை, ஆளுவார்க்கும் அவசர சட்டங்களைப் பற்றித் தியாகராச செட்டியார் பாடல்களின் வாயிலாக அறிய முடிகிறது.

**தொகுப்புரை**

இந்திய விடுதலைப் போரில் மேடைப்பாடல்களில் வி. எ. தியாகராச செட்டியார் (1931) பங்களிப்பு, போராட்டநிலை, சுதந்திர வேட்கையோடு மேடைப் பாடல்களைப் படைத்து வெளியிட்டதையும் அறியமுடிகிறது. விடுதலை போராட்டத்தில் இறந்த போர் வீர்களின் வீரமிக்க செயல்பாடுகளைப் இவரின் பாடல்களில் வெளிப்படுகின்றன. தகவல் தொடர்பு இல்லாத காலத்திலும் மேடை நாடகங்களில் எதிர்ப்பை வெளிக்காட்டித் தங்களின் பங்களிப்பை நாட்டிற்காக அர்ப்பணித்துள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. ரஜனி பாமிதத். இன்றைய இந்தியர் மொழிபெயர்ப்பு நூல், என். சி. பி. எச். 1978, ப.173

2.எம். எஸ். சுப்பிரமணிய அய்யர், காங்கிரஸ் மகாசபையின் பொன்விழா வெளியீடு, பதிப்பு - 1955, ப.204

3.பதினெட்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர், பதிப்பு - 1986, ப.12